https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# போதைமலைப் பழங்குடி மக்களின் நில அமைப்பும் குடி அமைப்பும்

**முனைவர் வே. ரேகா**
உதவிப்பேராசிரியர்
மொழிகள் துறை - தமிழ்ப்பிரிவு
கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர்-21

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் வாழ்கின்ற பழங்குடி மக்கள் குறித்துப் பல்வேறு ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. இருப்பினும் மலையாளப் பழங்குடியினரின் வாழ்வையும் பண்பாட்டையும் பற்றி முழுமையாக இதுவரை ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. போதைமலை மலையாளி பழங்குடியினரை வெளியுலகிற்கும், ஆய்வுலகிற்கும் அடையாளங்காட்டி, பழங்குடி மக்களின் வழக்காறுகளையும் பண்பாட்டையும் தொகுத்து ஆராயும் பொருட்டு இவ்வாய்வுக் கட்டுரை பயணிக்கின்றது.*

*நாமக்கல் மாவட்டம் போதைமலை மலையாளி பழங்குடியினரிடம் கள ஆய்வு செய்ததன் மூலம் அவர்களின் பழக்க வழக்கம், வழக்காறு, சமுதாய உறவுமுறைகள், வாழ்வின் முன்னேற்றம் போன்றவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது. இவர்களுடைய பண்பாட்டுக் கூறுகளை வெளியுலகிற்குக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் எழுந்ததால் மலையாளி பழங்குடியினரைப் பற்றி விரிவாக ஆராய்வதற்கு இவ்வாய்வுத் தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது.*

## Abstract

Many researchers have studied the indigenous communities living in the Western Ghats and other areas of Tamil Nadu. However, a comprehensive study on the lives and culture of the Malayali indigenous people has not been undertaken until now. This research aims to introduce the Malayali indigenous community of the Podaimalai region to the outside world and to the academic field, by exploring their customs, traditions, and cultural practices.

The idea to study the Podaimalai Malayali indigenous people of Namakkal district arose from the desire to bring to light their customs, societal relationships, and progress in life. Therefore, this study has been chosen to thoroughly examine the lives of the Malayali indigenous people.

***திறவுச்சொற்கள்: இயற்கை, நிலவியல், கிராமத்து விழுமியங்கள், யதார்த்த ஒப்புமை***

**முன்னுரை**

*மனித சமுதாயம் பழங்குடி அமைப்பிலிருந்து பல கிளைகளாகவும், இனக்குழுக்களாகவும் பிரிந்திருந்தது என்பது சமூக மானிடவியலாரின் கருத்தாகும். பழங்குடிகளின் வேர்கள் உலகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவியுள்ளன. தமிழ்நாட்டில் நாமக்கல்*

மாவட்டத்திலுள்ள போதை மலையின் அமைப்பும், குடி அமைப்பையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

### சுற்றுச்சூழல்

மலையாளி இனமக்கள் இயற்கையின் மீது நேசம் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்கள் வனத்தினைத் தந்தையாகவும், பூமியைத் தாயாகவும் நினைத்து வாழ்ந்து வருபவர்களாகக் காணப்படுகின்றனர். பழங்குடி மக்களின் சுற்றுச்சூழலைக் குறித்து க. குளத்தூரான்,

**"காட்டைச் சுற்றி வாழும் மக்களுக்கும் பழங்குடிகளுக்கும் அன்றாடத் தேவைக்கான பொருட்களை வாங்குவதற்கான வசதிகளையும் வேலையையும் நாம் வழங்காத வரையில் தங்களின் அன்றாட வாழ்விற்காக காடுகளை அழிப்பதிலிருந்தும், செடிகொடிகளைப் பயன்படுத்துவதிலிருந்தும் அவர்களைத் தடுக்க முடியாது"** என்று குறிப்பிடுகின்றார்.

### பஞ்சாயத்து முறை

போதைமலைப் பழங்குடி மக்களின் ஊர்ப் பஞ்சாயத்து வழக்குகளில் தீர்ப்பளிக்கும் முறை தற்போது வரை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. நல்ல நிகழ்வாக இருந்தாலும், எந்தவித காரியங்களாக இருந்தாலும் பஞ்சாயத்து மூலம்தான் முடிவெடுக்கப் படுகின்றன. எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் ஊர்ப்பெரியவர்களின் ஆலோசனைகளைப் பெற்று அதன்படி ஊர்க்கவுண்டர் தீர்ப்பளிக்கிறார். அவருக்கு ஊர் மூப்பன் உதவுகிறார். கிராம நடவடிக்கைகளில் ஊர்க் கவுண்டரின் செயல்பாடே முதன்மையானது ஆகும். சண்டை, குடும்பப் பிரச்சனைகள், விலங்குகள் திருடுபோதல், ஆண் - பெண் விரும்பக்கூடிய திருமணம், தனக்குப் பிடித்த ஆண்மகனுடன் உடன்போக்கு போன்ற வழக்குகள், விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளன. அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குத்ததொகை என்று தொகை நிர்ணயிக்கப்படுகிறது. அதேபோல் திருமணத்தின் போது பெண் வீட்டாருக்கு ஆண்கள் ஒரு குறிப்பிட்ட தொகை கொடுத்துத்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும்.

### குடும்பங்கள்

**குடும்பம் என்பது குறைந்தபட்சம் ஆண் ஒருவனும், பெண் ஒருத்தியும் குழந்தைகளோடு சமுதாயத்தாலோ, திருமணத்தாலோ அங்கீகரிக்கப்பட்ட நிலையான உறவில் அமைவதாகும். ஒரு ஆணும், பெண்ணும் அவர்களுடைய சமூக மரபுப்படி மண வாழ்வில் இருக்கக் கூடிய நிலையைக் குறிக்கிறது.**

**பக்தவத்சலபாரதி கூறுகையில் ஒரே வீட்டில் ஓர் ஆணும் பெண்ணும் காதலர்களாகவோ உண்டு மகிழ்ந்து வாழ்ந்தாலும் அவர்களிடையே சமுதாயம் ஏற்றுக்கொள்ளக்கூடிய கணவன், மனைவி உறவு அமையாதவரை அவர்கள் குடும்பம் என்ற அமைப்பை ஏற்படுத்தவியலாது.** (பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானுடவியல், ப.352)

மேலும், குடும்பம் என்பது ஒரு சிறிய குழுவாகவும் இருக்கலாம். பலர் அடங்கிய ஒரு பெருங்குழுவாகவும் இருக்கலாம். இதில் குறைந்தளவு ஓர் ஆணும் பெண்ணும் இடம்பெற வேண்டும். (பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானுடவியல், ப.351)

**குடும்பம் என்பது மணத்தால் கட்டப்பட்ட மாந்தர் குழுவாகும். இது இரத்தத் தொடர்புடையதாகவோ அல்லது தத்து எடுத்ததாகவோ அமைந்திருக்கும். அவர்கள் ஒரே வீட்டில் வாழ்பவர்களாகவோ, ஒத்த மனைவி, தாய் - தந்தை, மகன் - மகள், உடன்பிறந்தவர் என்ற உறவுடனும், பொதுவான பண்பாட்டுடனும் வாழ்வர். (The New Encylopedia Britanica Vol: IV P.673)**

இவ்வாறு மேற்கூறிய கருத்துகளின்படி இம்மலையினைக் குடும்பம் என்பது கணவன், மனைவி மற்றும் அவர்களின் குழந்தைகள் என்ற உறவுகளைக் கொண்டுள்ளது.

### மொழி

இவ்வூரில் வாழும் மக்கள் தமிழ் மொழியைப் பேசுகின்றனர். தமிழ்மொழி பேசுபவர்கள் பெரும்பான்மையாக உள்ளனர்.

### போக்குவரத்து

கீழூர், மேலூர், கொடைமலை ஊராட்சி மலைப்பகுதியாக இருப்பதால் அங்கு போக்குவரத்து வசதி இல்லை. கீழூர் முதல் வடுகம் வரை நடைபாதைக்கு வனத்துறை அனுமதி பெற்று சாலை வசதி அமைத்துக்

கொடுத்தால் மக்களுக்கு மலையில் விளையும் பொருட்களை எடுத்துச் செல்வதற்கும், அவசர உதவிக்கும் பயனுள்ள வகையில் இருக்கும். எனவே அரசு செவிமடுத்து பழங்குடி மக்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பது இப்பழங்குடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது.

## தெருக்கள்

மலையில் தெருக்கள் கிடையாது. ஆங்கங்கே வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. தெருக்கள் தூய்மையாகவும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

## வீடுகள்

இவ்வூரில் தென்னை, பனையோலை மற்றும் போதைப் புல்லைப் பயன்படுத்தி கூரை வேய்கின்றனர். மண்சுவரால் ஆன வீடுகளும் இன்றும் காணப்படுகின்றன. இவ்வீடுகள் வழிப்போக்கர்கள் இளைப்பாறுவதற்கு வசதி யாகவும் தங்கும் வகையிலும் திண்ணை களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளன.

## பழங்கால நினைவுச் சின்னங்கள்

போதைமலையில் பழங்கால நினைவுச் சின்னங்களின் உறைவிடமாகத் திகழ்கின்றது. கல்திட்டை, கல்பதுக்கை, குத்துக்கல் போன்ற வையும் மிகுதியாக உள்ளன. கற்பதுக்கை யைச் சுற்றிலும் கற்கள் வட்டமாக வைக்கப் பட்டுள்ளன. கல் பதுக்கையின் நடுப்பகுதி யில் நடப்பட்ட கல் நினைவுச் சின்னத்தின் அமைப்புடன் அமைந்துள்ளது. பெரும் பாலும் கற்குவியல்களும், சிறு கற்குவியல் களும் இங்கு காணப்படுகின்றன.

## மலையாளிகள் பெயர்க்காரணம்

இம்மலைகளில் வாழும் ஒவ்வொரு மக்களின் இனத்தைக் குறிப்பதற்கும் பல பெயர்கள் இருக்கின்றன. மலையாளிப் பழங்குடியினர் தங்களை மலை வெள்ளார், காஞ்சி மண்டலத்தார், மலைக்கவுண்டர், கவுண்டர் போன்ற பெயர்களால் தங்கள் இனத்தை அழைக்கின்றார்கள்.

## குடியிருப்பு முறை

போதைமலையில் வாழக்கூடிய பழங்குடி மக்களின் குடியிருப்பு முறை பழைமையைப் பின்பற்றித்தான் இருக்கிறது. மேலூர் குடிசைகள் தான் அதிகமாக உள்ளன. சில வீடுகள் சீட்டுகள் போட்டிருக்கின்றனர். கீழூரில் ஓட்டு வீடுகளும், கூரை வீடுகளும் உள்ளன. கொடை மலையிலும் அதே போன்று தான் வீடுகள் அமைப்பு உள்ளது.

## குடும்பத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

**மனித இனம் தோன்றி பல இலட்சக் கணக்கான ஆண்டுகள் ஆகியிருப்பினும் குடும்பம் என்ற வடிவமைப்பில் எப்பொழுது மக்கள் வாழக் கற்றுக்கொண்டனரோ அன்றைய நாளிலிருந்துதான் சமூகம் இயங்கத் தொடங்கியது எனலாம். குடும்பம் என்பது இயக்கமுற்ற சித்தாந்தத்தையே குறிக்கிறது என்று ஏங்கல்ஸ் குறிப்பிடுகிறார்.** (வாழ்வியற் களஞ்சியம் தொகுதி ப.591)

## தொகுப்புரை

போதைமலை பழங்குடி மக்களின் நில அமைப்பு மற்றும் குடியிருப்பு பழமையி லிருந்து மாற்றம் அடையாமல் இருந்து வருகிறது. நிலவியல் சூழலுக்கு ஏற்றவாறு குடியிருப்புகளின் தன்மைகள் மாறுபடுகின் றது. வீடு உள்ளமைப்பில் தனித்தனியாக அறைகளைக் கொண்டிருக்காமல் ஒரே இடத்தில் கூட்டுக்குடும்பமாக வசிப்பது இவர்களின் வழக்கமாகும். தற்பொழுது இச்சூழல் மாற்றமடைந்து இருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது. நாகரீகம் வளர வளர கூட்டுக் குடும்ப அமைப்பு மெல்ல சிதிலமடைந்து வருகின்றதை மேற்கண்ட பழங்குடி மக்களின் வாழ்வில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. இருப்பினும் ஒரு சில குடும்பங்களை சேர்ந்த மக்கள் பழமை மாறாது தங்களுடைய வாழ்க்கையினை முன்னோர்கள் காட்டிய வழியில் நடத்திக் கொண்டு வருகின்றனர்.

## துணைநூற்பட்டியல்

1. பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானுடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 1996.
2. Encyclopedia Britannica, Encyclopedia Britannica Inc. London, 2008